


# நல்லைநாதன் நான்மணிமாலை



அமரர் சரவணமுத்து நல்லைநாதன்
அவர்களின்

## அமரத்துவ ஞாபகார்த்த வெளியீடு

ரொறன்ரோ-கனடா
12-05-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லைநாதன் நான்மணிமாலை!

## வெளியீடு:

வேலணை மேற்கு,

அமரர்

சரவணமுத்து நல்லைநாதன் அவர்களது

ஞாபகார்த்த வெளியீடு

12-05-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்!

சிறந்த அறிவாளியாக, ஆங்கிலமும்
தமிழும் புலமைமிக்கவராகத் திகழ்ந்து
குடும்பநற் கோவிலிலே
குத்துவிளக்காக ஒளிர்ந்து,
வாழ்வாங்கு வாழ்ந்த
எங்கள் மாணிக்கத் தந்தை
சரவணமுத்து நல்லைநாதன்
அவர்களின் பாதார விந்தங்களில்
அவரின் முதன்மைத் தோத்திரம்
பாடும் நல்லைநாதன் நான்மணிமாலை
என்னும் இந்த நூலைச் சமர்ப்பித்து
வணங்குகின்றோம்!.

-மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சுற்றம் அனைவரும்.
12 , மேமாதம் 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு!



மண்ணுலகில்:
**19-06-1929**

விண்ணுலகில்:
**08-04-2012**

## அமரர் சரவணமுத்து நல்லைநாதன் அவர்கள்

### வானுலகு எய்திய பொழுது இலங்கிய திதி வெண்பா

ஆண்டு கரவருடம் ஆயவெழிற் பங்குனியில்
பூண்அபர பட்சத் திருதியையாம்-மாண்திதியே
நல்லைநா தன்அன்பர் நண்ணியே விண்நாடு
தில்லை அடைந்த தினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியிட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையாயின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகள்

## முதலாம் திருமுறை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

-திருஞானசம்பந்தர்

## இரண்டாம் திருமுறை:

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே

-திருஞானசம்பந்தர்

## மூன்றாம் திருமுறை:

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

-திருஞானசம்பந்தர்

## நான்காம் திருமுறை:

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

-திருநாவுக்கரசர்

## ஐந்தாம் திருமுறை:

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

-திருநாவுக்கரசர்

## ஆறாம் திருமுறை:

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

-திருநாவுக்கரசர்

## ஏழாம் திருமுறை:

பித்தாபிறை சூடீபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே.

-சுந்தரர்.

## எட்டாம் திருமுறை:

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே -மாணிக்கவாசகர்.

## ஒன்பதாம் திருமுறை:

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே
புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சேந்தனார்

## பத்தாம் திருமுறை:

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

-திருமூலர் திருமந்திரம்.

## பதினொராம் திருமுறை:

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

-திருமூல நாயனார் திருமந்திரம்.

## -பன்னிரண்டாம் திருமுறை:

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

-சேக்கிழார்.

## அருணகிரிநாத சுவாமிகள் அருளியது
## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரண்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைதரம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

-அருணகிரிநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்:

# கீர்த்தித் திருவகவல்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை யிருளை ஏறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்
நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசன்இப் புவனியை உய்யக
கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
தற்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்தனக் குப்பரி மாவிற்
றீண்டு கனகம் இசையப் பெறாஅ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்துந்
தேவூர் தென்பால் திகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்
ஏகம் பத்தின் இயல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்
துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மலம் அறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகஎன்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கினர் ஏங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே.

-மாணிக்கவாசகர்

# தில்லையில் அருளிய திருவண்டப்பகுதி

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச்
சூறை மாருதத் தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் நாடொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியின் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணின் திண்மை வைத்தோன் என்றென்
றெனைப்பல கோடி யெனைப் பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன் அஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மைஇல் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க

அரியதில் அரிய அரியோன் காண்க
மருவிஎப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாலொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து

முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட - வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ அருள் நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கறை சேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி -
நாற்றிசை நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவின் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்

பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்
டலைகடல் திரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்
கருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்
துவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையில் அருளிய
# போற்றித் திருவகவல்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏன மாகி முன்கலந்
தேழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய என்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்
யானை முதலா எறும்பீ றாய
ஊனமி லியோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் நூறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறைப் பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானோர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூ ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்ற நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றிமணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்தர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றிபோற்றி புராண காரண
போற்ற போற்றி சயசய போற்றி!

# வாழ்க்கையில் வெற்றி பெற

1. அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே.
2. இரக்கங்காட்டு ஆனால் ஏமாந்து விடாதே.
3. பணிவாயிரு ஆனால் கோழையாயிராதே.
4. கண்டிப்பாயிரு ஆனால் கோபப்படாதே.
5. சிக்கனமாயிரு ஆனால் கஞ்சப் படாதே.
6. வீரமாய் இரு ஆனால் போக்கிரியாய்யிராதே.
7. சுறுசுறுப்பாயிரு ஆனால் பதட்டப் படாதே.
8. தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே.
9. பொருளைத் தேடு ஆனால் பேராசைப் படாதே.
10. நம்ப நட ஆனால் நம்பி நடவாதே.

# ஏழு நற்குணங்கள்

1. ஏழ்மையிலும் நேர்மை
2. கோபத்திலும் நேர்மை
3. தோல்வியிலும் விடாமுயற்சி
4. வறுமையிலும் பரோபகாரம்
5. துன்பத்திலும் தைரியம்
6. செல்வத்திலும் எளிமை

7 பதவியிலும் பணிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை மேற்கு, எட்டாம் வட்டாரம்

# அமரர் சரவணமுத்து நல்லைநாதன் அவர்களது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்!

தன்புகழ் கொண்ட தாகத்
தரணியில் பூமிக் கோட்டில்
பொன்திரு மலைஇ யற்கைத்
துறைமுகக் கடலால் என்றும்
தென்கிழக் காசி யாவின்
திகழ்தரு இலங்கை என்னும்
பொன்புகழ் பூத்த நாடு
பெற்றஎம் தாய்நா டாகும்!

இந்துமா கடலின் முத்து,
இரத்தின துவீபம், ஈழம்
தந்திடும் பெயர்கள் நூறாய்
தாரணி இலங்கை பெற்றுச்
சிந்தொடு தேவா ரங்கள்
சிவன்திரு வால யங்கள்
கந்தவேள் கதிர்கா மத்தான்
கனிந்தபொன் நாடு கண்டீர்!

தேயிலை ரப்பர் நெல்லு
தென்னையும் கமுகும் பாலும்
நோயிலா வாழ்வும் தூய்மைத்
தெய்வத்தின் வீடாம் என்கக்
கோயிலாய் நின்ற தேசம்
குறுகிய நோக்கம் கொண்ட
நோயினர் ஆட்சி தன்னால்
நொருங்கிய பூமி இன்றாம்!

வடகிழக் கான தேசம்
வாய்த்ததோர் தமிழர் பூமி
குடமெனக் கல்விச் செல்வம்
கோவிலாய் நிற்கும் பூமி
நடமிடும் பரதம் பண்ணார்
நாடகம் கலைகள் ஓங்கும்
கொடையெனத் தமிழீ ழம்பேர்
குறித்ததே வையம் எங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ வடபால் யாழாம்
வளம்தரும் குடாநா டென்க
கமுகொடு தென்னை வாழை
கனிச்சுவை மாவும் பலாவும்
அமுதென நல்லைக் கந்தன்
ஆலயம் மகுடம் வைக்கும்
சமுதாய மேன்மை ஊற்றுச்
சந்ததித் தொன்மை பேசும்!

யாழ்நகர் அணித்தாய் விஞ்சும்
யாப்பெரும் புலவர் கொஞ்சும்
வாழ்வியல் சைவம் பக்தி
வாஞ்சையாய் சமயம் போற்றும்
ஏழதாம் தீவு தன்னில்
எழில்வே லணையாம் தொன்மை
சூழ்வதாய் அழகு சேர்க்கும்
சுந்தரத் தீவு என்பார்!

வேலணைத் தீவில் மேற்கு
விளம்பிடும் கல்விச் சாலை
மூலமாய் விளங்கும் மகா
முடிப்பிள்ளை யாரின் கோவில்
ஆலமா விருட்சம் போலே
அழகிடக் காட்டும் ஊரே
சீலமாய் உரைக்கக் கேண்மிர்
சிறப்பிடும் பதியம் காண்பீர்!

ஊரெலாம் இருக்கும் பண்பு
ஒற்றுமை, பிள்ளை யாரின்
தேரெலாம் இழுக்கும் பக்தி
தெருவெலாம் மணக்கும், மாரி
நீரெலாம் வளர்க்கும் நெல்லும்
நிகரிலாப் புகையி லையும்
பாரெலாம் வணிகம் வைக்கும்
பக்குவம் தெளிந்த ஊராம்!

## பிறப்பும் வாழ்வும்

தெளிந்தநல் ஊரில் தெய்வ தரிசனம்
வளர்ந்தநல் லூராம் வேலணை மேற்கில்
வெள்ளையர் ஆட்சி விளங்கிய போதும்
அள்ளி எடுத்த அறிவுச் சுடரால்
தபால் தந்தியும் தந்த இல்லமாய்
அபாரத் தறிவு ஆன்ற தந்தையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண முத்துத் தபால் அதிபரின்
வரமெனச் சேவை வழங்கிய போதாம்
போசர் என்று புகழ்ப்பெயர் இலங்க
நேசம் கொண்டவர் குடும்பம் தன்னில்
மனையறம் கண்ட மரகதம் அமமாள்
தனையனாம் நல்லை நாதன் முகிழ்த்தனன்!
தாயார் மறையத் தங்க இல்லத்தில்
சேயாய் உலவத் திகழும் இல்லத்தில்
இரத்தினம் அம்மாள் அன்னையாய் வரவும்
சரவண முத்துத் தந்தையார் பக்கம்
மூவர் அன்பாய் முகிழ்க்கச் சோதரர்
தேவர் போலத் திகழ்ந்தனர் நால்வர்!
நல்லை நாதன், தனஞ்சயன்,
சிவலோக நாதன், செந்தில் நாதனாய்
கல்வி அறிவும் கடவுள் அறிவுமாய்
நல்லதோர் வித்துவ நாயகர் ஆயினர்!
ஏறுபோல் உயர்ந்த இலட்சண முடையான்
தேறு தபால் திணைக்களம் ஊடே
பெரும்பணி ஆற்றிப் பேரும் புகழும்
திருந்திட நின்ற திகழொளிப் பொழுதில்
கரம்பன் ஊர்கா வற்று றையூர்
அருமூர் தன்னில் திரண்டதோர் செல்வச்
சிறப்புப் பொருந்திய வீயெம்மார் என்றே
வணிகச் சிறப்பு வாய்த்தநற் குடும்பத்தில்
அணிமகள் மங்கையை அகமாய் ஏற்றார்!
இராச லிங்கமும் இல்லாளாம் நாகம்மா
இராக மாகி இணைந்நல் வாழ்வில்
ஏழ்வர் பிறந்து இனிதுறம் காலையில்
வாழ்வின் இனிய வசந்தம் பரவிட
பரமேஸ் வரியுடன், மங்கையர்க் கரசி,
கருணா நிதியும், பாலாம் பிகையுடன்,
மகா லிங்கம், சுந்தர லிங்கம்,
சகா சோதரி சந்திர லீலாவும்
திங்களாய் விளங்கத் தேமொழி நங்கையாம்
மங்கையர்க் கரசியை மனையாள் ஆக்கி
நல்லை நாதன் நாயகன் ஆகினார்!
இல்லறம் என்னும் இனிய தடாகத்துள்
நல்லறம் புரிந்த நல்லை நாதனார்
பிள்ளை களாக மைந்தர் அறுவரை
அள்ளி மகிழ அவனியிற் சிறந்தார்!
வசந்தன், ஆனந்தன், சுகந்தன், ஜெயந்தன்,
முகுந்தன், விக்னேஸ்வரன் விளங்கிட மகிழ்ந்தார்!
மூத்தவர் வசந்தன் விநோதினி யாமெழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதொடு இணைந்த வண்ணமார் வாழ்வில்
நிசாந்தன் காஞ்சனா நிகரிலாப் பேரர்
உசாவித் திரிந்த உன்னத வாழ்வில்
வசந்தன் மைந்தன் வாழ்விலே மறைந்து
நிசத்தில் துன்பம் நிகழ்ந்தது ஆயினும்
பேரர்கள் வாழ்வொடும் பெரிதும் மகிழ்வுற
ஆரமாய் நின்று அரும்பணி ஆற்றினார்!
நிசாந்தன் அனுசா நேரிழை மணமுற
வசப்பிடும் இலண்டனில் வாழ்வுறக் கண்டார்!
காஞ்சனா சந்திரன் காந்தர்வ மணமுற
கனடா நாட்டில் கனிவுற மகிழ்ந்தனர்!
பேத்தி காஞ்சனா பிள்ளையாய்ச் சுஜன்னாம்
பூட்டனைப் பெற்று பெரும்கொடை யாக்க
நல்லையர் இல்லம் நன்றாய் விளங்கிட
எல்லையி லாததோர் இன்பம் அடைந்தவர்,
ஆனந்தன் என்னும் அடுத்த மைந்தராம்
தேனமுதாள் ஜெயாவுடன் தேர்ந்தார் இலண்டனில்!
சுகந்தன் என்னும் செயற்கரு மைந்தர்
அகத்தில் அழகியாம் சுகந்தியை மணந்து
சுபாஷினி, சாமினிச் சொல்லரும் பேத்திமார்
சுபாவத் துடனே செப்பியே மகிழ்ந்தார்!
இலண்டன் நகரில் இருக்கும் அவரை
நலங்கள் கண்டார் நல்லை நாதனார்!
ஜெயந்தன் நாலாம் ஜெயமார் மைந்தன்
செகத்தை மறந்து சேரவே இறையைச்
சுகத்தை மறந்து சோம்பிய நாதனார்
அகத்தும் பாரியா ரவர்நிலை எண்ணிச்
சோரா நெஞ்சைத் திடப்படுத் தியவோர்
ஆரா அமுதன் ஆன நாதனாய்
எழுந்து நடந்தார் இன்ப நாதனாய்
தொழுது இறையைத் தேடி வணங்கினார்!
முகுந்தன் மைந்தன் விரிந்த இலண்டனில்
அகத்தில் கல்யாணி ஆன மனைவியால்
லக்சுமி, கிருஷ்ணா ஆகிய பேரரை
மிக்கவும் கொடுக்க மிதந்தார் மகிழ்ச்சியில்!
விக்கினேஸ் வரன் வித்துவக் குடும்பதில்
தக்கவனாய் வந்த கனிஷ்ட புதல்வன்
விநோ என்னும் வேங்கிளை மணந்து
சந்தீஸ் என்னும் சண்முகப் பேரரை
சிந்தையில் இருத்திச் சிறந்த வாழ்வதில்
நல்லைநாதன் என்னும் நாட்டிறை போற்றும்
எல்லை யிலாதவோர் இன்ப மானிடர்
இரண்டா யிரத்துப் பன்னிரண் டாண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமுறும் ஏப்ரல் எட்டாம் திகதி
ஞாயிறு என்னும் நல்லிறை நாளில்
தூயபர பட்சத்து திருதியைத் திதியில்
நல்லைநாதன் என்னும் நல்ல மானிடர்
தில்லைப் பதந்தாள் திரும்பினார் அறிகவே!

**(நல்லைநாதன் அவர்களின் வாழ்வியல் சரிதம் முற்றிற்று)**

## மனைவி ஆற்றாமை!

கைப்பிறையால் கோதி என்னைக்
கைகளிலே ஏற்ற வண்ணம்
தெப்பமார் ஓடம் என்கத்
தெய்வீக வாழ்க்கை தந்தீர்!
ஒப்புவிக் கேனும் கோபம்
உள்ளதாய்க் காணா அன்பை
இப்புவி தன்னில் கண்டேன்
என்னுயிர் நாத னாரே!

பிள்ளைகள் வாழ்வும், கோவில்
பிள்ளையார் பணிகள் என்றும்
உள்ளமே மானி டத்தின்
உருவமே கொண்ட எந்தன்
தெள்ளிய மணமார் வாழ்வில்
திகழொளி பரப்பி நின்ற
வள்ளலே இனிய நெஞ்சே
வாழ்வினில் என்று காண்பேன்!

பாவிடும் வாழ்க்கை என்றும்
பாரெலாம் சுற்றி வந்தும்
கோவிலாய்த் தெய்வம் தேடிக்
கோர்த்துமே சென்ற போதும்
நோவிலாக் கோலம் கொண்டோம்!
நுகர்ந்ததோர் வாழ்வு கண்டோம்!
தேவியாய் என்னைப் பார்த்த
தேசனை எங்கே காண்பேன்!

## மைந்தர் கலங்குதல்!

ஆறுமைந் தர்கள் என்க
அவனியில் பிறந்த காலை
ஊறுகள் பலவும் செய்து
ஓடிய பருவம் தன்னும்
பேறுகள் பெற்று வாழ்வில்
பெரியவர் ஆன பின்பும்
நூறொடு நிற்'பீர் என்று
நினைத்தநாம் இடிந்து போனோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயரும் தந்தை என்றும்
தக்கதோர் இறைவன் என்றும்
ஆயகல் வித்தேர் எல்லாம்
அடுக்கிய பின்னாள் எல்லாம்
ஏயதாய் தந்தை என்று
இலக்கியம் படைத்த பின்னும்
போயதாய் எண்ணி வாழப்
போகுமோ அப்பா சொல்வீர்!

## மருமக்கள் அழுதல்!

அப்பாவுக் கப்பா என்ற
அருகதை மாமா வுக்காய்
செப்பிட நிற்கும் உங்கள்
சேய்களின் இல்லம் தோறும்
கப்பிய சோகம் இன்று
கனக்குதே! மாமா வுங்கள்
ஒப்பிலா முகமும் வாழ்வும்
இதயத்தில் அகலு மாமோ!

தில்லையில் வாழும் அந்தத்
திகழொளித் தெய்வம் போன்று
எல்லையில் பக்தி, காலை
ஏற்றிடும் கீர்த்த னைகள்
முல்லைபோல் சிரிப்பு! அன்பில்
முகிழ்த்ததோர் பேச்சு! எங்கள்
இல்லத்தே தெய்வம் என்று
இனியாரைக் காண்போம் மாமா!

## பேரர் கலங்குதல்!

தாத்தாவே உங்கள் தோளில்
தத்திய நாட்கள் தானும்
காத்திடப் புத்திக் கூர்மை
கதைகளைப் புகன்ற போதும்
சாத்திரம் இறைமை போன்ற
சரிதையைச் சொன்ன போதும்
நேத்திரம் கொண்ட தாத்தா
நினைவது அகலு மாமோ!

## பூட்டன் சுஜன் கூறுதல்

பூட்டனாய் வந்தேன் உங்கள்
பூர்வீகத் துடனே நின்று
வாட்டமில் லாத வாழ்வும்
வகையுறும் கல்வி யோடும்
காட்டமில் லாத பேச்சுக்
கனிந்திடும் கதைகள் நேர்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டமும் கொண்ட உங்கள்
உருவத்தை என்று காண்போம்!

## சகோதரர் வருந்துதல்

அண்ணாவே நீங்கள் எங்கள்
அருகினில் இருப்பீர் என்ற
திண்ணமாம் நினைவால் நாங்கள்
திடமாக இருந்தோம் அன்றோ!
வண்ணமார் வாழ்வில் கோடும்
வகையிலாப் பிரிவால் இன்று
எண்ணமாய் முழுதும் நின்ற
உங்களைப் பிரிந்தோம் அந்தோ!

## மைத்துனர்கள் வருந்துதல்!

வீயெம்மார் இல்லம் என்ற
விளக்கதாய் வந்தீர் ஐயா!
தாயெங்கள் தோற்றம் போலே
தந்துநீர் மறைந்தீர் ஐயா!
ஏயதாம் பணிகள், உங்கள்
எழுத்தறி வித்த பாங்கு
தோயவே தொண்டு செய்த
தூயரை மறப்போம் அல்லோம்!

## மைத்துனிமார் வருந்துதல்!

மருமக னாக வந்து
மனையறம் செய்த நீங்கள்
ஒருகணம் எங்கட் கெல்லாம்
உயரிய ஆசான் போலே
வருபவை எல்லாம் பார்த்து
வகையறப் பணிகள் செய்து
திருமணம் செய்து வைத்த
சிறந்தவர் பிரிந்தார் தாமோ!

## ஊரார் வருந்துதல்!

உயர்ந்தநல் தோற்றம்! உண்மை
உருவிலே பதிந்த செம்மல்
கஜமுகப் பிள்ளை யாரின்
கனிந்தநற் தொண்டன், என்றும்
அயர்ந்திடா மனிதம், பற்று
ஆகிடப் பேசும் ஆன்ற
வியன்மிகும் நல்லை நாதன்
வித்தகர் என்றும் வாழ்வார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்பகிர்வு!

அமைதியின் சின்னம்! தூய
அடக்கத்தின் வண்ணம்! உச்சி
இமயமே போலும் ஆற்றல்
எப்பணி யெனினும் நேர்மை!
சமயத்தில் பற்று! தெய்வச்
சந்நிதி வாழ்வு என்று
நமையெலாம் ஈர்த்த எங்கள்
நல்லையர் பறந்தார் தாமோ!

பிள்ளையார் கோவில் தொண்டர்!
பெரும்தபால் அதிபர்! பெற்ற
இல்லத்து அரசி யோடு
எங்குமே உலவும் மன்னர்!
முல்லையாய்ச் சிரித்துப் பேசி
முகமதி காட்டும் அன்பர்
நல்லைநா தன்போல் இன்னும்
நாமினி யாரைக் காண்போம்?

தமிழ்த்தபால் அதிபர் சங்கத்
தலைவராய்க் கனடா நாட்டில்
அமைத்திடத் துணையாய் நின்ற
அறிஞராம் நல்லை நாதன்
இமைப்பொழு தெல்லாம் மன்ற
இயற்பணி செய்தார்! அந்தச்
சுமைகொளா மனித நெஞ்சம்
சென்றது இறைவன் தாளே!

சாலவோர் புகழார் தந்தை
சரவண முத்து மைந்தன்
சீலமும் அறிவும் விஞ்சச்
சிறப்பெலாம் கொண்ட நெஞ்சன்
வேலணை யூரின் வேராய்
வித்துவ வழியில் வந்தோன்
நீலமாய் விரியும் விண்ணார்
நிசத்திறை யானான் அம்மா!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

வேலணை மேற்கு, மகா கணபதிப்பிள்ளையார்
(முடிப்பிள்ளையார் கோவில்) வழிபடுநர் சங்கம்-கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சரவணமுத்து நல்லைநாதன் அவர்கள் பேரில்..!

வாழ்க்கை நிலையாதென வள்ளுவரும் சொன்னார்.
வாழ்ந்து போனோர் எல்லோரும்
வகையாய் இவ்வுண்மைதந்தார்.

வளத்துடனே வாழ்ந்திடினம்
வறுமையிலே வாடிடினும்
வாழ்க்கையதன் இறுதிக் காலம்
வரும்பொழுது..
காலனவன் கவர்ந்தான்
காலத்தால் வென்றிடவோ
எம்மால் முடியாது எனப்
பலரும் இயம்பிடுவர்.
இயற்கையினிற் கலந்திட்ட
போஸ்ற் மாஸ்ரர் மகனான
போஸ்ற் மாஸ்ரர் நல்லநாதன்
புண்ணிய வழிபோகப்
புறப்பட்ட கதையதுவும்
இதற்கோர் உதாரணமே!

வேலணையைக் காதலித்து
வெகுவாகப் பாடு பட்டு
வேலணையின் ஒருபகுதிச்
சரித்திரத்தை வெளிக்கொணர்ந்த
பெருமைதனைச் சுமந்து
பெரியபுலப் பிள்ளையின்
பேரருளை நாடிநின்று
கோவில் குளம் கட்டிக்
கும்பாபிஷேகம் செய்ய
அவரவரை ஊக்குவித்து,
ஆனபணிகள் செய்து
நன்றே சிறப்பித்த
நல்லைநாதன் இன்றில்லை என்றதுமே:
"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"
என்ற அந்த வள்ளுவனின்
வாக்கினைத் தானுணர்ந்து
வகை வகையாய்ப் பிரார்த்தித்து
எண்பத்தி மூன்றாண்டின் எல்லையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சுதந்திரம் பேணிடத்
தானாய் உலாவி வந்து
வாழ்ந்து முடித்திட்ட
நல்லைநாதன் தன் ஆன்மா
சாந்தியடைக வென்று
சார்ந்திடுவோம் ஈசன்தன் தாள்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

-வேலணை மலர்.

# தற்பெருமை இல்லாத மனிதர்!

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமையைக் கொண்டது இவ்வுலகம். திருவள்ளுவரின் இக்கூற்று நிரந்தரம் இல்லாமையைப் பற்றி எமக்கு நன்கு விளக்கியும், இத்தத்துவத்தின் உண்மையில் எந்த மாற்றமும் இல்லாத போதிலும், நமக்கு வேண்டியவர்களின் திடீர் இழப்பு எம்மைத் துன்பத்தில் விட்டு விடுகின்றது. அந்த வகையில் அமரர் சரவணமுத்து நல்லைநாதன் அவர்களின் மறைவு எம்மைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

அமரர் நல்லைநாதன் வேலணை மேற்கிலே புகழ்பூத்த குடும்ப வாரிசும், வேலணை தபாலதிபராகக் கடமையாற்றியவருமான சே.நா.சரவணமுத்து அவர்களின் மூத்த புதல்வருமாவார். இளமையில் இருந்தே கல்வியில் மிளிர்ந்த அமரரும், தபாலதிபராகவே சேவை செய்தார். இவர் அரசாங்க சேவையில் இருக்கும் காலத்தில் மிகவும் கண்ணித்துடனும், கட்டுப்பாட்டுடனும் செயல்பட்டார். அத்துடன் தொழிற்சங்கவாதியாகவும் சேவை செய்தார்.

இவருடைய தந்தையார் தமது குலதெய்வமான வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) மீது அளவிறந்த பக்தி கொண்டிருந்தவர். இவ்வாலயத்தின் நிர்வாக சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று நீண்ட காலமாக ஆலய நிர்வாகத்தை திறம்பட நடாத்தியவர். அவரின் மறைவுக்குப்பின் மகன் நல்லநாதன் நிர்வாகசபை தலைமைப் பொறுப்பை ஏற்று, கோவிலின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தார். இதனால் மக்களினது நன்மதிப்பையும் அன்பையும் பெற்றவர்.

தமிழ் மொழி போன்றே ஆங்கில மொழியிலும் புலமை பெற்றிருந்த அமரர் அவர்கள் அறிவியல், அரசியல், ஆத்மீகம் சம்பந்தமான புத்தகங்கள் வாசிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவராகக் காணப்பட்டார். புத்தகங்களை வாங்கிச் சேமிப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.

அமரர் அவர்களை நான் முதலில் சந்தித்தது 1969ஆம் ஆண்டு. அன்றிலிருந்து எங்கள் நட்பு தொடர்ந்தது. 1971ஆம் ஆண்டு இவரின் மனைவியின் சகோதரிக்கு என்னைத் திருமணம் செய்து வைத்தார். வசதியுடையவராக இருந்தும், அவர் மிக அமைதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையம் கொண்டவராகவும் அதேநேரத்தில் எந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மன உறுதியுடையவராகவும் விளங்கினார். எந்த வேளையிலும் கோபம் கொள்ளாது தனக்கே உரித்தான புன்சிரிப்புடன் காணப்படுவார். தக்க சமயத்தில் தனது உறவுகளுக்கும் தன்னை நாடியவர்களுக்கும் நல்ல அறிவுரை கூறி ஆற்றுப்படுத்தும் திறன்கொண்டவராக இருந்தார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

-சகலன், ஆர். சுந்தரமூர்த்தி

# மறப்பேனா அண்ணா!

காட்சிக்கு எளியனாய், மலர்ந்த முகத்தினனாய்,
குலதெய்வம் விநாயகனுக்கே பற்றாளனாய்,
பகலவனாய் எமக்கு ஒளிகாட்டி உடையவனுக்கே
உமை ஆளாக்கினீரே!

இருகண்களாய் இங்கே எனக்கு இருவர் என இருந்தேன்.
ஓரீராண்டில் இழந்தேன் இருவரையும்.
இரட்டைக் கோபுரமாய் தந்தை, பிள்ளைகளென
ஐந்தாகியபின் அன்பர் தம்பரொடு அறுவர் ஆனோம்.
அன்னையை இழந்தோம் இளவயதில்.
அவர்கள் பாசத்தை, அன்பைச் சுவைத்தறியோம்.
சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டிய கடமைக்குக் கடனாய்
ஒரு சொட்டுக் கண்ணீர் உதிர்க்கவும் அறியாப் பருவமது.
தந்தையும் தாயுமாகிய எம்தந்தை ஆற்றிய பணிக்காய்,
முன்னறி தெய்வமெனப் போற்றிப் பணிந்து நிற்பீரே!
வாடிய பயிரைக் கண்டு வானமே இழிந்து வந்தாற்போல் வந்த அன்பர் தம்பரின் முப்பத்தைந்தாண்டு சேவையை நன்றியோடு பேசி நிற்பீரே!
ஐம்பத்தெட்டுக் கொலைவெறியின் போது
வதந்திகளால் துடித்து நின்ற எமக்கு, மறுபிறவியாய்
வந்து மகிழ்வித்தீரே அண்ணா!
மேய்ப்பனை இழந்த ஆடாகிவிட்டேன்.

உங்கள் ஆத்ம சாந்திக்காய்
சகோதரன்,
சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPAPPA!

**Appappa,**

One of your first emails to my sister and I started with 'Have you heard of Swami Vivekananda?'

As this great Hindu Saint said:

'Our duty is to encourage everyone in his struggle to live up to his own highest idea, and strive at the same time to make the ideal as near as possible to the truth.'

You have always strived to encourage us to learn more about our culture, our history and ourselves; to be the best that we can be.

As you once fondly told us, your mother did not eat onions when carrying you, to ensure you would not be hot tempered. You are the most patient, thoughtful and kind natured person we have known - qualities we hope to have learnt from our time with you.

Whatever we achieve, we do in the hope of making you proud.

Appappa, we will miss you dearly, but will treasure your memory forever.

Grand daughters

Subashini and Shamini

# SARAVANAMUTHTHU NALLAINATHAN

Nalla as he was popularly known to his friends was born on 19th June 1929 and joined the Postal Department as a class two Postmaster on First January 1949 and during the span of forty years of his carrier he served in various post offices in the island. Nalla got his due promotions to the various grades and finally retired as Chief Postmaster, Kandy. Though we had no occasions to work with him yet we met frequently at union level.

Subsequent to his migration to Canada, where we too had migrated, we met frequently at committee meetings and annual get-togethers of the Sri Lankan Post & Telecommunication Officers Association of Canada.

It is with profound sorrow and shock that we heard the news

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of his sudden death on 8th April 2012.

A man of few words yet his opinions on any subject discussed, both concise and meaningful. He used to contribute regular articles to the newsletter of Sri Lankan Post & Telecommunication Officers Association of Canada of his experiences as a Postmaster during his service in the Postal Department. He was elected as Secretary of Sri Lankan Post & Telecommunication Officers Association of Canada and one of the boards of directors of Postelecom Inc. He was also involved in the social activities of the Velanai West Maha Kanapathippillaiyar Temple Association – Canada.

A couple of years ago he underwent a by pass surgery and thus had to cut short his out door activities. Though he had recovered fully he seemed to have lost his gusto. Very often he would remark (it is only a matter of time then the call for us will come).

He leads behind his wife, children and grandchildren. May his soul attain moksha.

V.Selvalingam
N.I.H Sharma
R. Sundaralingam
P.S. Thiagarajah

# NALLANATHAN, A GOOD WRITER & POSTMASTER WITH A GOOD HEART

## Pon Kulendiren

**( Former Supdt. of Telecom. Traffic & Telecom Consultant)**

"When we first met and spoke,
We knew that we were in same wave length.
We knew we would always be friends.
Our friendship has kept on growing
and I'll be here for you to the end."

True friendship is perhaps the only relation that survives the trials and tribulations of time and remains unconditional. A unique blend of affection, loyalty, love, respect, trust, sharing of views and loads of fun is perhaps what describes the true meaning of friendship. Similar interests, mutual respect and strong attachment with each other are what friends share between each other. These are just the general traits of a friendship. To experience what is friendship, one must have true friends, who are indeed rare treasure.

In our life, we meet many faces, but not all faces get imbedded in our memory. The appearance of Nallanathan, behaviour, and the way he starts mixing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with you, makes you respecting the person. The friendship emerges from the heart in the course of time. After passing out of the University, I joined the Post & Telecom Department in 1966 as Asst Supdt of Telecom Traffic. I had the first chance to meet him at Jaffna Post Office in 1969 when I visited the office on inspection. He was seated in a small room smiling. At that time he was the Chief Postmaster of Jaffna, a responsible administrative position. From his talk I concluded that he was a good administrator, and a man of integrity. He had good relationship with the staff and they liked the way he handled their issues.

The smiling face of Nallanathan clearly proves the fact that Saravana-muthu Nallanathan would have been a handsome youth at the time of going to school. From his name itself one could easily conclude that he was a good man and friendly with people. He had his education at Jaffna Hindu College and then at Vaddukoddai Jaffna College before selecting his carrier. His father was a Sub-postmaster at Vellanai and Nallanathan followed his father's foot steps when he joined as Postmaster at the age of 22. . His native village was predominantly a Hindu village" Velanai" named by Dutch as "Leiden" island in memory of a municipality in Holland . Majority of the people from Velanai were devotees of Murugan and historians say that one time the area was administered by a leader called "Velan" and hence the island got the name Velanai. Nalla married Mangayarkarasi from Karampon, a village not too far from Velanai and was blessed with four business oriented sons who are doing well in life.

The carrier he selected was to be a Postmaster and became a master of public and staff relations. He gradually developed it through his smile, tact, and by mixing with different communities from different towns in Sri Lanka. . I called my very close friend Nallanathan briefly as Nalla and gradually recog-nised his talent in administration and writing skills in Tamil & English. I fully used his skill in journalism to start an e magazine named "Kuviyam". He gave his full support for its growth and was a main contributor. He wrote many research articles on different topics to the magazine and all of them were well recognised. To mention few, here is the list:

31 Years as Postmaster which reflected his carrier in the Postal department. He wrote this using the name by using pseudonym "Illayapiran". In that article he mentioned about his experience as a Trade Unionist in organizing a strike to protect the rights of staff. He also mentioned about the contemporaries with whom he worked and their attitude towards work in his carrier.

He wrote interesting research articles on Bio Chemical Weapons, Patriotism, Ragging in Educational Institutions, Corporate Terrorism, Resurgence of Rightwing Politics in Sri Lanka, Children caught in war etc. From the title of the articles he wrote, it clearly implied that he would have done much reading and research in writing such articles. He also wrote a short story about the dog named Jenny he had when he was working in Anuradhapura as Chief Postmaster. Being a Postmaster, he worked in places such as Kandy, Hatton, Kurunegala, Veyangoda and at the central Mail exchange in Colombo, where he handled the difficult task in managing the minor staff.

He showed interest in Trade Unionism and was actively involved with

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Union of the Post & Telecom Officers ( UPTO). He continued his interest in Trade unionism after migrating to Canada by establishing Sri Lankan Post & Telecom Officers Association in Ontario and served as Secretary and President. He served as a consultant for Post Telecom Inc business.

When I wrote my first book in English titled " Short stories from Sri Lanka" ( reflective of customs and traditions) of Tamils from Sri Lanka, I searched for a good writer who could write the preview for the book. My search ended up with no person other than the good writer Nalla. His preview for the book was excellent and touched on the issues handled in the short stories. I have missed him to write a preview for my second book, a novel titled " Frogs in the well".

When he was living with his family in the apartment opposite Flemington mall in Scarborough, he enjoyed the life by meeting Tamil friends daily at the mall and discussed Sri Lankan politics. It became a usual custom for me to call him daily and exchange views about the articles to be published in "Kuviyam"

When Nalla told me that there is a plan to publish a book about Velanai, I suggested to him to form group literary men from his village to go into the heritage of the village and write about prominent people who lived in the village, as the book should serve as historical record for the future generation and be preserved.

Now that Nalla has departed from this world, his soul is eternal and is not made up of perishable material. He has more to perform to the world in his rebirth. Death and subsequent rebirth in a different body is a stage for the soul that follows the stages of birth, childhood, adolescence.

## Late Mr.Saravanamuthu Nallainathan

Just ten minutes before midnight on the fateful day of Sunday 8 April 2012 Anandan called me to inform me of his father's demise. My sense of sadness was profound as I lay in bed, reflecting on his remarkable personality, his past life and the memorable moments I was privileged to share with him over a period of fifty years.

The passing of the crown prince of Velanai, in short the Marquis has sent shock waves through the whole spectrum of his immediate family, relatives and friends. The light of his home faded away suddenly bringing grief and misery to everyone who knows him far and near. Death is inevitable. So let me dwell in the happy memories and legacy he left behind, rather than the sorrows that invariably follow death occurs.

Since history is best learnt through biographies because the lives of people make history, for that reason as a person who knows him reasonably well, I think, I am qualified to touch a bit of his biography.

Coming from an eminent prestigious affluent family in Velanai West, still a little village of 1940s which enjoys a sense of intimacy and neighbourliness .Late Nallanathan is the eldest son of Late Saravanamuthu, the first post master of Velanai having been born with silver spoon on 29 June 1929.His mother is from Thunavi, in Vaddukkoddai. When the gorgeous boy was born both parents were

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

over the moon. In short the proud couple was on cloud nine. They named him Nallanathan which means good man/leader/husband/God. This happiness did not last even a year. His mother died quite unexpectedly. So this boy of tender age had to be fed with cow milk bottled in feeding bottle. Any way this boy grew up along with his brothers who had to face the same fate. In real life he proved worthy of his name. He was benevolent, honest, honourable, kind-hearted, praiseworthy, reliable, religious and virtuous. His exemplary life is worth emulation.

Late Sara Nallanathan had his primary education at American Mission Tamil School Velanai and the secondary education at Jaffna Hindu College and Jaffna College. While in HSC at Jaffna College he sat the Post masters and signallers service entrance examination and came with flying colours.

At Jaffna College he showed his real colours as said by late Thuraiaratnam the former MP for Point Pedro. I happened to see him at Valveettituari on a small matter. He asked me where I was from. I said from Velanai. He inquired of Nallainathan and commented thus

" Nallainathan was a contemporary of mine at Jaffna College. This silver-tongued personality is a brilliant orator and a debater. He showed his colours as the president of HSC union. He is a wonderful conversationist who could contribute to any discussion or forum of expression. He has a fine sense of humour and is quick to convert a situation into something hilarious. He can write on any topic without preparation and make a extemporaneous speech" Finally he said " To be frank he disappointed me he should have become a graduate and even as an MP for Kayts".

It is universally accepted, acknowledged, that a single man in possession of a good fortune and bonanza must be in want of wife. This is the first line in the first chapter of the book "Pride and Prejudice" authored by Jane Austin. Nallainathan is not an exception.

In terms of this dictum Nallanathan entered into holy matrimony in1950 with pomp and pride. The fortunate bride was the daughter of VM.Rajalingam fondly called VMR., a successful business man from Karampon, Kayts.

The wind "beneath his wings" was his devoted wife, Mangaiarkku Arasi. Metaphorically and literally she had been a Queen to her beloved consort. Nallanathan would not have attained such heights without her strength, courageous support, the love and affection she had towards her mate. She played the role of mother for three generations. Nallanathan lost his mother hardly at the age of one. When she married she played a dual role, mother and wife. The second stage when her natural sons-Vasanthan, Ananthan, Suganthan, Jayanthan, Mugunthan and Vikki were born she played the role of natural mother. Final stage is when she became a mother to his grandchildren-Nishi and Kanchi. What a wonderful and dutiful they are indeed. They got Nishi married,bought him a house in London and settled him right royally. Then they educated Kanchi up to the University level, got her married and built a house for her at Markham. No grand-parents in this heavenly body would do such a Herculean task though they have the means to do so. During the past few years with her husband's failing health it was good to see the devotion with which his wife looked after him. He was shared

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with tender, loving care by her

It was once remarked to Lord Chasterfield that a man is the only creature endowed with the power of laughter.

"True" said the peer "and you may add perhaps that he is the only creature that deserves to be laughed at".

I read this one day in Time Magazine and when I talked to him on the phone sometimes back I shared with him what the peer said. A sound of hearty laughter came from Markham. Then I said "it is only Senthil laughs but you,Thanajayan and Sivam smile" "But today you are laughing".

Nallanathan and smile are synonyms. Those of us who knew him well, will always remember his smiling face and his irresistible sense of humour. I never saw him angry, never heard him speak in an aggressive way. His face was always lit with a smile.

He is always meticulously dressed in fashionable dress walks into his office like a prince with a smiling face. Out of work he is always found dressed in Bombay mill dhoty and bush shirt.

He was compassionate, open minded and merry- hearted. His ideals are embodied in the following words of mahatma Gandhi..

I shall not fear anyone on earth
I shall fear only God
I shall not bear ill-will towards anyone
I shall not submit to injustice from anyone
I shall conquer Untruth by Truth
I shall put up with all suffering".

He is one who was truly blessed by the God fairies at his birth, he was gracious, dignified, gentle, intellectual, cultured, decent, well-mannered and above all born with silver spoon.

Nallainathan won the hearts of all those who came into contact with, especially his subordinates and no one had a bad word for him. He stole away the hearts and minds of many. Many began to cherish his friendship and appreciate his sterling qualities. People were mesmerised by him. Another rare gift he had was his ability to move with kings without losing the common touch. He was able to move freely with people from all walks of life. He made people feel at ease and never patronised anyone in the work place. At work he was strict and his junior staff feared him. At the same time he stood by them when needs to be

No wonder he had an excellent rapport with his staff in general, junior and senior. He did not believe in grandeur in any form whatsoever.

He could have enjoyed the finest things in life for his abundance wealth but lived a simple and humble life.

He was one of the threads which held together his family garland of varying colours and fragrances. His physical presence may not be here to hold together the flowers anymore, but the legacy he left behind is and will be there guiding us through this life, for ever remembered with love and pride.

Good bye Mr Nallanatthan
Thank you for the impact you made on me

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

May your soul rest in peace
Let me pray
“Oh Almighty God Shiva
If roses grow in Heaven
I beg you please pick a bunch for me
Place it in my friend's arms
and tell him they “re from me
Tell him I love him and miss him
&when he turns to smile
Place a kiss upon his cheek
&hold him for a while for me”

**Shan Kathirgamanthan**
**Sydney**
**18 April 2012**

# கண்ணீர் அஞ்சலி

## வேலணை மத்திய கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்-கனடா

அமரர் சே. நா. சரவணமுத்து நல்லைநாதன் (இளைப்பாறிய பிரதம தபாலதிபர்) அவர்களது மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் அளவில்லாக் கவலையும் அடைந்தோம். பிறப்பவர் ஒரு நாள் இறப்பது நியதி என்ற உண்மையை உணர்ந்து நமக்கு நாமே ஆறுதல் கூறியபோதும் இத்துன்பத்தை எம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா வின் சார்பில் அன்னாருக்கு எமது இறுதி வணக்கத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்திக்கொள்கின்றோம். மேலும் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரதும் துக்கத்தில் நாமும் பங்கு கொள்வதோடு அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
இங்ஙனம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் சிவகாமசுந்தரி சமேத நடராசப்பெருமானை வேண்டி நிற்கும்

**நிர்வாகசபை**
**வேலணை மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்-கனடா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்

கரம்பன், ஊர்காவற்றுறை
வர்த்தகர் வி.எம்.இராசலிங்கம்
+
நாகம்மா
↓
பரமேஸ்வரி (அமரர்), மங்கையர்க்கரசி, கருணாநிதி, பாலாம்பிகை, மகாலிங்கம், சுந்தரலிங்கம், சந்திரலீலா

வேலணை மேற்கு, சரவணமுத்து (பி.எம்)
+
மரகதம்-இரத்தினம்
↓
நல்லைநாதன், தனஞ்சயன், சிவலோகநாதன், செந்தில்நாதன்

மங்கையர்க்கரசி + நல்லைநாதன்
↓
- வசந்தன் (அமரர்) + விநோதினி
  ↓
  நிசந்தன் + அனுசா
  காஞ்சனா + சந்திரன்
  ↓
  சுஜன்
- ஆனந்தன் + ஜெயா
- சுகந்தன் + சுகந்தி
  ↓
  சுபாஜினி
  சாமினி
- ஜெயந்தன் (அமரர்)
- முகுந்தன் + கல்யாணி
  ↓
  லக்சுமி
  கிருஷ்ணா
- விக்கினேஸ்வரன் + விநோ
  ↓
  சந்தீஸ்

(அமரர் நல்லைநாதன் அவர்களது இந்த குடும்ப விருட்சத்தில் இராசலிங்கம், சரவணமுத்து, மரகதம், இரத்தினம், பரமேஸ்வரி, வசந்தன், ஜெயந்தன், தனஞ்சயன் ஆகியோர் அமரர்கள் ஆவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்!

இறப்பு என்பதும் பிறப்பேயாம் -வைய
இருப்பை முடித்த கணக்கேயாம்!
புறப்படு என்ற அழைப்பினிலே -விண்
புகுந்த திதியிடும் புதுநாளாம்!
கருப்பை உதிர்த்த நாள்முதலாய் -மண்
காலடி பதித்த சுவடுகள்போய்
இறைக்குள் மலர்ந்து சாந்திபெறும் -அந்த
இயலை எண்ணி இருப்போமே!

-குமரக்கோட்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நன்றி நவில்கின்றோம்

அமர ஜோதியாய், அருட்பெரும் சோதியில் சங்கமமாகிவிட்ட எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சரவணமுத்து நல்லைநாதன் அவர்களது பிரிவில், எங்கள் இல்லத்திற்கு வந்து ஆறுதல், அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்குகொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும்,

பார்வையாளர் மண்டபத்திலே வருகை தந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகள், அந்தியேட்டிக் கிரிகை முதலியவற்றில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்,

கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தேவார தோத்திரங்களைப் பாடியும் மற்றும் கிரியைகளை நடாத்திய அந்தணப் பெருமக்களுக்கும்,

இந்த நினைவு மலரை அழகுற அச்சமைத்த விவேகா அச்சகத்தினருக்கும், தட்டச்சில் எழுதி வடிவமைத்த பாரதி பதிப்பகத்தாருக்கும், நினைவு மலருக்கு தங்கள் உள்ளக் குமுறல்களை எழுதித்தந்த அனைவருக்கும், தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளை, சகோதரர்கள்,
சுற்றம் அனைவரும். 12-05-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளத் திருத்தி யுருகிடப் பாடி யொடுங்கிமனம்
அள்ளப் பரவி யழைத்திடும் போதெலாம் அங்குசத்தால்
மெள்ளத் துயரோ ரிடிகள் விலக்கி விதந்தருளும்
பிள்ளையார் வேலணைப் பூம்புக லாகிய பொற்கரனே!

தொண்டரை ஆக்கித் திருப்பணி யாகிடத் தினம்பாடிக்
கண்டதோர் ஐங்கரக் காலடி மேவிய காதலினால்
வண்டுபோ லூரெலாம் வாரிடப் பெற்றதோர் வண்ணமுளார்
கொண்டு வணங்கிடும் கோபுர வேலணைக் கொற்றவனே!

-குமரக்கோட்டன்

---

வேலணை மேற்கு, கந்தர்மடம், கனடா-ரொறன்ரோ ஆகிய
இடங்களில் வாழ்ந்தவரான அமரர் சரவணமுத்து நல்லைநாதன்
அவர்களது ஞாபகார்த்த நூல் வெளியீடு-12-05-2012

வடிவமைப்பு: பாரதி ஆர்ட்ஸ் அச்சகப் பதிவு: விவேகா அச்சகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org